
# தமிழ்ச்சிட்டு

குரல் 25
இசை 11

விலை:
உரு. 3.00



சிறுவர் கலை
இலக்கியத் திங்களிதழ்

நளி 2033
( நவம்பர் - 2002 )

# அறிவுப் புரட்சி!

பள்ளியிற் குறும்பு செய்யாதே — உளப்
பான்மையை எப்போதும் குறைக்க எண்ணாதே!
பிள்ளைக ளோடொரு பிள்ளை— பின்
பிழைகள் நீ செய்வதில் நேர்மையொன் றில்லை!

தாழ்வும் உயர்வும் எண்ணாதே! — கல்வி
தரும் உயர் வொன்றைவிட் டெதையும் எண்ணாதே!
ஆழி நடுவினைப் போலக்— கற்று
அமைதிகொள்! இரையாதே கரைநீரைப் போல!

கணக்காயர் சொல்லை மதிப்பாய் — அவர்
கட்டளை கேட்(டு) அதைப்போல நடப்பாய்!
குணக்குன் றெனப்புகழ் நீசேர்! — பெருங்
குறும்பன் எனும்பெயர், கீழ்மைக்குச் சரிநேர்!

மற்றவர் பொருளை வவ்வாதே — உனை
மாளவைத் தாலும் பொய் சொல்ல ஓவ்வாதே!
கற்றவர் முன்னில் பேசாதே! — எனில்
கல்லாதார் தமைவிட்டு விலகக் கூசாதே!

"சாதி"யொன் றில்லையென் றெண்ணு — அதைச்
"சாத்திரம்" சொன்னாலும் நம்பாதே கண்ணு!
வீதிகள் கோணைகள் ஆயின் — அங்கு
வாழ்பவர் யாவரும் மாந்தரே என்பாய்!

ஏழையர்க் கென்றும் இரங்கு — அவர்
ஏழ்மைக்குக் காரணம் செல்வர் செருக்கு!
பீழையன் றோ ஏற்றத் தாழ்வு — மாந்தப்
பிள்ளைகள் யாவர்க்கும் பொதுவன்றோ வாழ்வு!

உடுப்பதும் உண்பதும் கொண்டே — நல்
உயர்வென்றும் தாழ்வென்றும் கற்பித்தார் பண்டே!
கொடுப்பதல் லால்உயர் வில்லை — செல்வக்
கூறுகள் சிலருக்கே உரிமையென் றில்லை!

பொதுமை நினைவை வளர்ப்பாய் — அதைப்
பூவுல கெங்கணும் பரப்ப முனைவாய்!
புதுமை விளைவுகள் செய்வாய் — உள்ளப்
புரட்சிக்கு அறிவென்னும் நன்னீரைப் பெய்வாய்!

நீர்பொது; நிலம்பொது தம்பி! — இந்த
நெறிமுறை பிழைபடல் பெருந்தீது தம்பி!
பார்பொது; பயன்பொது தம்பி! — நலம்
பாடு படுவோர்க்கே உரியது தம்பி!

பழங்கதை பேசிடு வோர்கள் — குலப்
பகுப்புகள் தம்மைப் புகுத்திடு வோர்கள்.
விழுங்கிடும் செல்வத் திருடர் — இன்ன
வீணர்எல் லாரையும் வீழ்த்துக தம்பி!

—பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

-1969

சிறுவர் கலை இதழ்

குரல்–25 இசை–11

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

நிறுவனர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தமிழ்ச்சிட்டு'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை – 601 302.
தொலைபேசி எண் : 277 1231

# நம் மாந்த வாழ்க்கை

நாம் இந்த உலகில் பிறப்பதற்கு முன்பிருந்தே இந்த உலகம் இயங்குகின்றது. எல்லாரும் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். பொருள்கள் ஒவ்வொன்றின் இயக்கத்தையும் நாம் விளங்கிக் கொள்கிறோம். ஒவ்வொருவரின் செயலையும் நாம் அறிந்து கொள்கிறோம்.

உலகத்தை அறிந்துகொள்ள அறிந்துகொள்ள நமக்கு அறிவில் வெளிச்சம் ஏற்படுகிறது.

நம்மில் சிலருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கிறது. பலருக்கும் அந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை.

கணிப்பொறிக் கல்வியும், தொழில் நுட்பக் கல்வியும், மருத்துவக் கல்வியும் குறிப்பிட்டவருக்கு மட்டுமே உண்டு என்பதால் அதைப் பெறுகிற அறிவு அனைவருக்கும் இல்லை என்று பொருள் இல்லை.

அனைவருக்கும் கல்வி கொடுக்க அரசு மறுக்கிறது.

ஏழையர்கள் உயர்ந்த கல்வி பெற முடியாமல் தவிக்கின்றனர்.

பொருள் உள்ளவர்களுக்கு மட்டுமே வாய்ப்புகள் உள்ளன. எனவே அவர்கள் மட்டுமே அறிஞர்களாக முடிகின்றது.

பெரும்பொருள் ஈட்டிக்கொண்டு பணக்காரனாகத் திரிபவன் திமிராக இருக்கிறான்.

பெரும் அறிவைத் தமக்கான வாய்ப்பால் ஈட்டிக் கொள்கிறவர்கள் செருக்காய் அலைகிறார்கள்.

அப்படிச் செருக்காய் இருப்பவர்களிடம் பொதுமை உணர்வு இருப்பதில்லை.

பொதுமை உணர்வு இல்லாதவர்களுக்குப் பண்பும் இருப்பதில்லை.

நம் பாவலரேறு ஐயா அவர்கள் அதனால்தான் மூன்றுவகைச் செருக்குணர்வுகள் நம்மிடம் இருக்கக்கூடாது என்பார்கள்.

பொருள்செருக்கு, வினைச் செருக்கு, அறிவுச் செருக்கு என்பனவே அந்த மூன்றும்.

பொருளாலும், வினையாலும், அறிவாலும் நாம் பொதுவுணர்வோடு வாழவேண்டும்.

பொதுமை உணர்வு இல்லாமல் போனால் அந்த மூன்றும் நம் பண்பை அழித்துவிடும்.

அதைத்தான் நம் வள்ளுவப் பெருந்தகை மக்கள் பண்பில்லாதவர் மாந்தத் தன்மையற்றவர் என்று கூறுகிறார்.

நம்மிடையே பொதுமை உணர்வை வளர்ப்பதும், அதன்வழி மாந்த உணர்வைக் காப்பதுமே பண்பு என உணர்தல் வேண்டும்.

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டி எண்ணுவதும், செயல்படுவதுமே மக்கள் பண்பு.

அத்தகைய பண்புணர்வோடு வாழ்வதே மாந்தர்களாய் பிறந்துள்ள நம் மாந்த வாழ்க்கை.


❒

**கொறிக்கக்**
**கொஞ்சம்**
**செய்திகள்**


அமெரிக்கா அரிசோனாவின் மலைப்பகுதியில் விளையும் கள்ளிச் செடிகள் 200 அடிகள் வரை வளரக் கூடியவை. அந்தக கள்ளிச் செடியில் தேன் எடுக்கிறார்களாம்.

# நீங்களும் செய்து பாருங்களேன்


1. படத்தில் உள்ளதுபோன்று சுருளை 3 பகுதிகளாகப் பாதி வரை வெட்டவும்.





2. சுருளை மடக்கவும்.





3. நீளவாட்டத்தில் நடுச் சுருளை வெட்டவும்.






4. நடுவில் குறுக்காக வெட்டவும்.


5. படத்தில் இருப்பதுபோன்று வெட்டி மடிக்கவும்.



6. நுனியில் பிடித்து இழுக்கவும்



7. இதோ ஒரு மாலை.



# அரசருக்குத் தண்டனை


இங்கிலாந்தையும் இங்கிலாந்து ஆட்சியின்கீழ் உருவாக்கப்பட்ட இந்தியாவையும் ஏழாம் எட்வர்டு ஆண்டுவந்தார். அப்பொழுது அவர் ஒரு குற்றம் இழைத்துவிட்டார்.

மாமன்னரைத் தண்டிக்கலாமா என்று இங்கில்லாந்து நாடாளுமன்றமும் அரசு மன்றமும் கூடிப் பேசின.

இறுதியில் சட்டப்படி உசாவித் தண்டனை வழங்குவது என் முடிவு செய்தார்கள். உசாவலுக்குப் பின் குற்றத்தை மன்னரும் ஒப்புக் கொண்டார்.

என்ன தண்டனை வழங்குவது என்று நடுவருக்குத் தெரியவில்லை. இங்கிலாந்து ஆளுகைக்கு உட்பட்ட அனைத்து வழக்குமன்ற நடுவர்களுக்கும் தீர்ப்பின் படியை அனுப்பிவைத்தார்.

குறித்த நாளில் அனைவரும் அவரவர்கள் முடிவெடுக்கிற தண்டனை குறித்த விளக்கத்தைத் தனக்கு அனுப்பும்படி இங்கிலாந்து உயர்நெறிமன்ற நடுவர் கேட்டுக் கொண்டார்.



அப்படியாக அனுப்பி வைத்த எவருடைய கருத்தும் நடுவருக்கு உடன்பாடாக இல்லை.

இறுதியாக இந்தியாவுக் குள்ளேயிருந்து அன்றைய சென்னை மாநிலத்தின் நடுவர் முத்துசாமி ஐயர் அனுப்பிய கடிதம் இங்கிலாந்து நடுவருக்கு நிறைவளித்தது. அதன்படி அவர் அந்தத் தண்டனையை நிறைவேற்ற முடிவெடுத்தார்.

முத்துசாமி ஐயரின் கடிதத்தில் இவ்வாறு இருந்தது: "ஆட்சி செய்பவருக்கும் மக்களுக்கும் ஒரே சட்டம்தான். அது இறைவனே ஆனாலும் ஒரே தண்டனைதான் கொடுக்க வேண்டும்.

எட்வர்டு மன்னருக்குக் கொடுக்கக் கூடிய தண்டனை பல நூற்றாண்டு வரையில் மக்களின் நினைவில் இருக்க வேண்டும்.

எனவே 1 கோடி உருபாய்க் காசுகளில் மன்னரின் உருவத்தை மணிமுடி(கிரீடம்) இல்லாமல் மொட்டைத் தலையாகப் பொறிக்க வேண்டும். உயர்குடியில் பிறந்தவருக்கு இதுவே பெரும் தண்டனை. இதுதவிர வேறு தண்டனை தேவையில்லை" என்று எழுதியிருந்தார்.

இங்கிலாந்து நடுவர் மிக மகிழ்ந்து தண்டனையை அறிவித்தார். மன்னருக்கு இந்தத் தண்டனை பெருமகிழ்வை அளித்தது.

முத்துசாமி ஐயர் அளித்த தண்டனை மிகவும் சிறப்பானது என்று புகழப்பட்டது. அந்தச் சிறப்புக்கு அடிப்படையாய் அவருடைய உருவச் சிலை ஒன்றைச் சலவைக் கல்லில் சென்னை உயர்நெறி மன்றத்தின் வாயிலில் வைத்தது அன்றைய இங்கிலாந்து அரசு.

அவர் எழுதிய தீர்ப்பை அரசர்கள் புகழ்ந்தனர்.

ஆனால் அன்றைய மக்களுக்கு அது பிடிக்கவில்லை.


உயர்குடியினனுக்கு ஒரு தீர்ப்பு, ஏழை மக்களுக்கு இன்னொரு தீர்ப்பா என்று வருந்தினர்.

மக்கள் குற்றம் செய்தால் அவர்கள் உயிரை எடுப்பது, அரசன் குற்றம் செய்தால் அவன் மயிரை மட்டும் எடுப்பதா?

முத்துசாமி ஐயரின் தீர்ப்பு ஏற்றத்தாழ்வான தீர்ப்பு என மக்கள் மறுத்தனர்.


*

# ‘அணு’ — குண்டு போடுவதற்கு மட்டுமன்று — அணுவின் ஆற்றலை வேறு எந்த வகையில் எல்லாம் பயன்படுத்தலாம்?



**வேளாண்மை:**


புதிய விளைநிலங்களை உருவாக்க, குறிப்பாக விளைச்சலைக் கெடுக்கும் பூச்சிகள், நிலத்திணை நோய்களை ஓரகத்தனிமத்தைப் (ஐசடோப்புகள்) பயன்படுத்தி ஒழிக்கலாம். இப்போது உள்ளதைவிட மும்மடங்கு அதிக விளைச்சல் தரும் பயிரினங்களை கதிரிய ஓர்கத்தனிமத்தைப் பயன்படுத்திப் பெறமுடியும்.



**மின்சார உருவாக்கம்:**

நீர் மின் உருவாக்கமும், அனல் மின் உருவாக்கமும் அதிகச் செலவினமாக மாறி வரும் சூழலில் தக்க பாதுகாப்புடன் அணுமின் நிலையங்களை அமைக்கலாம். பெரிய தொழிற்சாலைகள், சிற்றூர்ப்புறத் தன்னிறைவு என்று இந்தத் துறை விரிவடைய வாய்ப்புள்ளது.


**மருத்துவம்:**




கதிரிய ஓரகத்தனிமங்கள் மருத்துவத் துறையில் ஏற்கெனவே பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. ‘தைராய்டு’ மூளைக் கட்டி மற்றும் நெஞ்சக் கோளாறுகளையும் ஓரகத்தனிமத்தைப்

('ஐசோடோப்பு')களைப் பயன்படுத்திக் கண்டுபிடிக்கவும் குணப்படுத்தவும் வழியுண்டு.

**தொழில் துறை:**




ஓரகத்தனிமங்களால் மிக அதிகம் ஊதியமடையும் துறை இது. வண்டிகளின் எரிபொருள்களை ஆய்வு செய்தல் முதல் ஆடைகள், அணிகலன்கள் செய்தல், மகிழுந்துச் சக்கரங்கள், புதிய வகை ஞெகிழி மற்றும் வார்ப்பிரும்பு செய்தல் என்று இத்துறையில் அணுஆற்றலின் பயன்பாடு 21ஆம் நூற்றாண்டில் விரிவடையும் எனக் கருதப்படுகிறது.



**வண்டி இயக்கம்:**


தொடர் வண்டி, கப்பல்கள் ஏற்கெனவே அணு ஆற்றலால் இயக்கி ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பல செயற்கைக் கோள்கள் அணுஆற்றலால் இயக்கப்படுகின்றன. நீர்மூழ்கிகள், உந்துகள், வானூர்திகள் யாவும் கன்னெய்யை(பெட்ரோலை)ப் பயன்படுத்துவது குறைந்துவிட வாய்ப்புள்ளது. ஏனென்றால் கிடைத்தற்கு அரிய எரிபொருளாகக் கன்னெய் மாற இன்னும் சில பத்தாண்டுகளே உள்ளன. இந்நிலையில் அணுஆற்றலால் இயக்கப்படும் வண்டிகள் பெருகும் என்று கருதலாம்.

**உணவுப் பாதுகாப்பு:**



உணவிலிருந்து நச்சுத்தன்மையை நீக்க, நீண்ட நாள் கெடாமல் பாதுகாக்கச் செய்ய 'ஐசோடோப்புகள்' பயன்படுகின்றன. இந்த முறையில் பாதுகாக்கப்படும் உணவு பல மாதங்கள் கெடுவதில்லை. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சப்பானிலும் ஏற்கெனவே இந்த முறை நடைமுறைக்கு வந்துள்ளது.

# நிழல் மேல் நம்பிக்கை



**- மா. பூங்குன்றன் -**

இன்றைக்குத் திரைப்படங்களில் கதைநாயகர்களாகவும், நல்லவர்களாகவும் நடிகர்கள் பலர் நன்றாக நடிக்கின்றனர். கதைக் கயவர்களாகவும், தீயவர்களாகவும், பல நடிகர்கள் நன்கு நடிக்கின்றனர். கதைநாயகர்களாக நல்லவர்களாக நடிக்கும் நடிகர்கள் தம் உண்மை வாழ்க்கையிலும் அப்படியான பண்பையே பெற்றிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. பொல்லாதவர்களாக நடிக்கும் நடிகர்கள் அவ்வாறு உண்மை வாழ்க்கையில் தீயவர்களும் இல்லை. இருவர்க்கும் நடிப்பு என்பது தொழில்.

அவர்கள் ஏற்று நடிக்கும் கதைமாந்தர்க்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை. இதை நாம் வேறுபிரித்துப் பார்க்கத் தெரியவேண்டும்.

ஆனால் அண்மையில் தமிழ்நாட்டு மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பலர் அவ்விரண்டையும் பிரித்துப் பார்க்கத் தவறிவிடுகின்றனர். படத்தில் கதைத்தலைவர்க்காக ஒருவர் பாடல் எழுதுகிறார். ஒருவர் பாடலைப் பாடுகிறார். கதைத் தலைவர் வாயை மட்டும் அசைக்கிறார். இது அனைவர்க்கும் தெரியும். ஆனால் வாயை அசைக்கிறவர்க்கே உரிமை பதிக்கப்படுகின்றது. மக்கள் நிழலையே உண்மையென நம்புகின்றனர்.

• • •

அக்காலத்தில் ஊரைக்காக்கும் வீரன் ஒருவன் இறந்து விடுகிறான். அவனுக்குப்பின் அவனுக்கு இணையாக ஒருவர் ஊரில் இல்லை. அவனைப்போன்ற ஒரு கல் செய்து நட்டு வைத்தனர். அவன் பயன்படுத்திய படைக்கலங்களை அங்கு செருகிவைத்தனர்.

அக் கல்லை வழிபட்டனர். அது காவல் தெய்வமானது. அந்த ஒரு தனிமாந்தன் இறந்ததும் அவன்மீதிருந்த பற்றுதல் மக்களுக்கு விடவில்லை. அவனுக்கு இணையாக ஒருவனைத் தேர்ந்தெடுக்கவும் இல்லாமல் நடுகல்லை வழிபட்டு வந்தனர்.

• • •

ஒரு சிறுமி சிற்றன்னையின் பாதுகாப்பில் வளர்ந்து வந்தாள். அவளின் தந்தை வெளிநாட்டில் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். மாதந்தோறும் பணம் அனுப்பிக் கொண்டிருந்தார். ஆனால் சிற்றன்னையோ அச்சிறுமியை நன்கு கவனிக்காமல் கொடுமைப் படுத்திக் கொண்டிருந்தாள்.

நாள்தோறும் வீட்டுப்பணிகளைச் செய்துவிட்டுப் படிக்கவும் நேரமில்லாமல் சிறுமி தொல்லைப்பட்டாள்.

இதற்கிடையில், தன் தந்தையாரின் ஒளிப்படம் அவளிடம் இருந்தது. அதைப்படுக்கும் போது எடுத்து வைத்துக் கொண்டு அந்த ஒளிப்படத் தந்தையாரிடம் தன் குறைகளைச் சொல்லி அழுதாள். அதுமிகவும் ஆறுதலாக இருந்த்து.

சிற்றன்னை தனக்குச் செய்யும் கொடுமைகளையும் தான் தொல்லைப் படுவதையும் தந்தையாகிய அவர் இருந்தால் தன்னை எவ்வாறு செல்லமாக வைத்துக்கொள்வார் என்றெல்லாம் மிகவும் உருகி உருகித் தன் தந்தையாரின் படத்தை வைத்துக்கொண்டு அழுதாள்.

இது அடுத்தநாள் அடுத்தநாள் எனத்தொடர்ந்து நாள்தோறும் இரவு இது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது.

அப்பா நீங்கள் நேரில் எப்போது வருவீர்கள். அப்போது நான் இன்னும்பல செய்திகளையும் நேரில் சொல்வேன் என்று படத்தைப்பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவ்வாறே ஒருநாள் தன் தந்தையார் நேரில் வந்துவிட்டார். தன் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டார். அதேபோல் சிற்றன்னையிடம் அன்பாகப் பேசினார். அவ்வாறு பேசியது சிறுமிக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. தன் தந்தையாரின் அன்பில் சிற்றன்னைக்குப் பங்கு போய்விட்டதாக உணர்ந்தாள்.

அன்றைய நாள் இரவு மறுபடியும் தன் குறைகளை படத்திலிருக்கும் தந்தையிடமே கூறினாள். படத்திலிருக்கும் தந்தை வழக்கம்போல் அன்பாகச் சிரித்துக் கொண்டே அவளின் குறைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவளிடம் மட்டுமே.

# தென்மொழி
# நாள்காட்டி

**தி.பி. 2034** **கி.பி. 2003**

- பொலிவான தோற்றங் கொண்ட பல்வண்ணப் படம்.
- அறிஞர் பெருமக்களின் தமிழ் மொழி - இனம் - நாடு பற்றிய தெள்ளிய கருத்துரைகள் - பொன்மொழிகள்
- நினைவு கூர்தற்கான நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு குறிப்புகள்

**இன்ன பல சிறப்புகளுடன் அணியமாகிக் கொண்டிருக்கிறது.**

**அன்பர்கள் தம் தேவையும் பிறரையுங் குறித்து எழுதுக!**

*விற்பனையாளர்கள் தொடர்புகொள்க!*

விளத்தங்கட்கு:

அமைச்சர், **தென்மொழி,**
மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302
தொலைபேசி : 277 1231.

# பொன்மொழிகள்

என் மனம் விரும்பும் புத்தகங்களை மட்டும் கொடுத்து என்னை வாழ்நாள் முழுவதும் சிறையிட்டாலும் நான் வருந்தமாட்டேன் — *மாசினி.*

ஒருமுறை அறிவாளியுடன் பேசுவது ஒருமாதம் புததகங்களைப் படிப்பதைவிட அதிக நன்மை தரும்.

— *சீனா.*

மதம் பிடித்தவனுக்கு மூளை இல்லை, அதனால் சிந்திக்க இயலாது; நெஞ்சம் இல்லை; அதனால் உணர முடியாது

— *ஓகானல்.*

படிக்கத் தகுந்த புததகம் வாங்கத் தக்கதே — *இரசுகின்*

கல்வியின் இலக்கு செய்திகளைத் தெரிந்துகொள்வது மட்டுமன்று, வேலைக்கு அடிகோலுவதுமன்று, சான்றோனாக்குவதே — *இரசுகின்*

முதலாவதாக, மாணவன் தன் தாய்மொழியில் புரிந்துகொள்ளவும், பேசவும், படிக்கவும், எழுதவும் நாம் கற்பிக்க வேண்டும் — *எச்.சி. வெல்சு.*

கல்வியின் முழுநோக்கம் மனவளர்ச்சி

— *செர்வுவட் ஆண்டர்சன்*

தேசங்களுக்கு மலிவான பாதுகாப்பு கல்வி — *பர்க்கு*

புததகங்கள் காலம் என்னும் கடலின் கரையில் நிறுத்தப்பெற்றுள்ள கலங்கரை விளக்கங்கள் — *விப்பிள்*

— தொகுப்பு: பெ. குமாரி, ஆசிரியை

# உண்டேன் உண்டிலேன்

புலவர்: என்ன ஔவையீர்! பாண்டிய மன்னரின் திருமணத்திற்கு சென்று வந்தீரே. சுவையான அறுசுவை விருந்தாக இருந்திருக்குமே நன்கு உண்டீரா?

ஔவை: உண்டேன், உண்டேன், உண்டேன்!

புலவர்: ஏன் மூன்று முறை சொல்கிறீர். அவ்வளவு சிறப்பான விருந்தா?

ஔவை: அதையேன் கேட்கிறீர்.
விருந்திற்கு வந்த கூட்டத்தில் சிக்குண்டேன்.
வெளியே தள்ளுண்டேன்.
பசியினால் வயிறு சுருங்குண்டேன்.
ஆனால் சோறு மட்டும் உண்டிலேன். அதனால்தான் அப்படிச் சொன்னேன். □

# கசக்கவில்லை

புலவர் ஒருவர் நோயுற்றுப் படுக்கையில் கிடந்தார்.
சுற்றமும், நட்பும் அவரைச் சூழ்ந்து இருந்தனர்.

புலவர் சோறுண்ண முடியாது, தாமே பாலும்
குடிக்க இயலாத நிலையில் இருந்தார்.
எனவே பாலில் துணியைத் தோய்த்து அவர் வாயில்
வைத்து மெதுவாகப் பிழிந்தார் அவர் நண்பர்.

பாலைக் குடிக்காமல் துப்பி முகம் சுளித்தார் புலவர்.
"என்ன பால் கசக்கிறதா?"
என்று அன்போடு கேட்டார் நண்பர்.

புலவர் அமைதியாகப்
"பாலும் கசக்கவில்லை; துணியும் கசக்கவில்லை".
என்றார்.

# காலம் உயிர் போன்றது

மதிநுட்பமும், மனவலிமையும் கொண்டவர்தான் மாவீரன் நெப்போலியன். ஒருமுறை தம் படைத்தளபதிகள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் விருந்து வைக்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். அனைவரும் இசைவளித்திருந்தனர்.

அந்த நாளும் வந்தது. அந்த நேரமும் நெருங்கியது. ஒரு நொடிக்கூடக் காலம் கடத்தாமல் விருந்தைப் பரிமாறச் செய்து சுவைத்து உண்ணத் தொடங்கினார். உண்டு முடித்து எழுந்தபோது தளபதிகள் ஒருவர்பின் ஒருவராக வந்து கொண்டிருந்தனர்.

"என் இனிய தளபதிகளே! விருந்து நேரம் முடிவடைந்து விட்டது. இப்போது பணி செய்ய வேண்டிய நேரம் தொடங்கி விட்டது. எல்லோரும் வாருங்கள். நாம் ஒரு நொடியைக்கூட வீணடிக்காமல் செயலில் ஈடுபடலாம்" என்று கூறிவிட்டு நடக்கத் தொடங்கவே, தளபதிகள் தம் காலத் தாழ்த்தத்திற்கு வருந்திக் கொண்டே ஏமாற்றத்துடன், அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

எதையிழந்தாலும் திரும்பப் பெறலாம் — மானத்தையும் காலத்தையும் இழந்துவிட்டால் திரும்பப் பெற இயலாது இல்லையா? காலத்தை இழப்பது வாழ்வை இழப்பதாகும்.

இன்று என்பதும் எதிர்காலம், இப்பொழுது என்பதே நிகழ்காலம். எதையும் நாளை செய்யலாம் என்று தள்ளிபோடக்கூடாது. இன்றே கடைசி நாள் என்றே பணிசெய்ய வேண்டும். இன்றைய செயலை நாளை செய்யலாம் என்றால்... நாளையச் செயலை என்று செய்வது?

*


## தமிழ்ச்சிட்டு

*(சிறுவர் கலை இலக்கியத் திங்களிதழ்)*


- ஆண்டுக் கட்டணம் உரு. **36.00**
- வாழ்நாள் கட்டணம் உரு. **350.00**
- தனி இதழ் உரு. **3.00**

***வெளிநாட்டுக் கட்டணம்***

1. வானூர்தி வழி ஆண்டுக் கட்டணம் உரு. **250.00**
2. கப்பல் வழி ஆண்டுக் கட்டணம் உரு. **200.00**

# வாழ்க்கைப் பாதையில் சீனப் பெருஞ்சுவராய்...

கி.பி. ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினான்காம் ஆண்டு! ஆய்வுக்கூடத்தில் தம் மகனோடு தாமசு ஆல்வா எடிசன் முழுமூச்சாகப் பணிசெய்து கொண்டிருக்கிறார். அப்போது தீப்பொறி ஒன்று அங்கிருந்த பொருள்களின்மேல் பட்டுத் தீயாக உருமாறிக் காட்டுத் தீயாய் ஆய்வகத்தின் அனைத்துப் பகுதியிலும் பரவுகிறது.



அணைக்க முடியாத அளவு பெருகியதும் எடிசனும், மகனும் தப்பி ஓடிவந்துவிட்டனர். ஒரே நொடியில் அவரின் அறிவு, உழைப்பு எல்லாம் சாம்பலாகிப் போயின. தம் மகனிடம் "உடனே உன் அம்மாவை அழைத்துக் கொண்டு வா! இந்தக் காட்சியை வாழ்க்கையில் இனிக் காண முடியாது; அவளும் பார்க்கட்டும்" என்று கூறினார்.

விண்ணை முட்டும் நெருப்பைக் கண்டு, "ஐயோ, இந்த ஆய்வகத்தில் பல இலக்கம் மதிப்புள்ள இயந்திரங்கள் இருந்தனவே, உங்கள் வாழ்நாளின் தொடக்கக் காலத்தில் துன்பப்பட்டுச் சேர்த்த ஆய்ந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளும் அவை தொடர்பான நூற்கட்டுகளும் எரிகின்றனவே" என்று கதறினார்; பதறினார் அவரின் துணைவியார்.

மனைவியின் கண்ணீரைத் துடைத்து அவரின் தோளில் கைவைத்து, ''கலங்காதே! நம் எல்லோருடைய தவறுகளும்கூட இந்தத் தீயில் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருக்கின்றன. இனி நாம் அரிச்சுவடியிலிருந்து நம்முடைய வேலையைத் தொடங்குவோம்''.

சிறிய தவறுகள் வாழ்க்கைப் பாதையில் சீனப் பெருஞ் சுவராய் மாறித் தடுத்துவிடும். சிறிய தீப்பொறி பெருங் காட்டை அழித்து விடுவது போல. எனவே, சிறியதென்று எதையும் நினைக்காமல் சிந்தித்துச் செயல்பட்டால் துன்பம் தவிர்க்கலாம் இன்பம் அடையலாம்.

—தொகுப்பு: **பெ. குமரி, புதுவை**

## பதினெட்டு அகவையும் குருதிக் கொடையும்

குருதிக் கொடைக்கு பதினெட்டு அகவை
கடந்தவராக இருக்க வேண்டும். ஏன்?

உடலில் குருதியை உருவாக்கம் செய்யும் 'எலும்புச் சாரம்' பதினெட்டு அகவையில்தான் முழுமையான வளர்ச்சி அடைகிறதாம். முழுமையான வளர்ச்சியுற்ற எலும்புச் சாரத்தைத் தான் குருதிக் கொடை மூலம் இழக்கும் குருதியை ஈடுசெய்ய முடியும்.

எனவேதான் பதினெட்டு அகவைக்குட்பட்டவர்கள் குருதிக்கொடை செய்ய விரும்பினால் பெற்றோர்களின் இசைவினை, எழுத்து மூலமாகப் பெறுகின்றார்கள்.


## தென்மொழி

*(தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்)*

**கட்டண விளக்கம்**

- ஆண்டுக் கட்டணம் (மலர் உட்பட) உரு **70.00**
- வாழ்நாள் கட்டணம் உரு.**700.00**
- தனி இதழ் உரு. **5.00**

**வெளிநாட்டுக் கட்டணம்**

1. வானூர்தி வழி ஆண்டுக் கட்டணம் உரு. **350.00**
2. கப்பல் வழி ஆண்டுக் கட்டணம் உரு. **250.00**

# இன்னுமா உறக்கம்?

— புதுவை தமிழ்நெஞ்சன் —

அணிலு அண்ணே! அணிலு அண்ணே!
எங்கே தாவுறீங்க?
அறுசுவைக் கனிகள் பழுத்திருக்கு
சுவைக்கத் தாவுறேங்க!

காக்கை அண்ணே! காக்கை அண்ணே!
எங்கே பறக்குறீங்க?
ஈக்கள் மொய்க்கும் செத்த எலியை
அகற்றப் பறக்கறேங்க!

தேனீ அண்ணே! தேனீ அண்ணே!
எங்கே விரையிறீங்க?
தேனைச் சேர்க்கப் பூக்களை நாடித்
தேடி விரையிறேங்க!

எறும்பு அண்ணே! எறும்பு அண்ணே!
எங்கே போகுறீங்க?
இருக்கும் போதே சேர்த்து வைக்க
ஊர்ந்து போகுறேங்க!

சேவல் அண்ணே! சேவல் அண்ணே!
ஏனோ கூவுறீங்க?
தூங்கிக் கிடக்கும் தமிழினத்தை
எழுப்பக் கூவுறேங்க!

*

# நாணயத்தால் வென்றிடு!

—க. சண்முகசிதம்பரம்—

நல்லபெயர் வாங்கிடுவாய் தம்பி — எதையும்
நாணயத்தால் வென்றிடுவாய் தம்பி!
பிள்ளைகளை வையாதே தம்பி — எதற்கும்
பின்வாங்கிச் செல்லாதே தம்பி!

புறஞ்சொல்லல் ஆகாது தம்பி — காலத்தைப்
பொன்போலக் கருதிடுவாய் தம்பி!
அறியாமை நோய்விரட்டு தம்பி — என்றும்
அழுக்காறு கொள்ளாதே தம்பி!

தன்னைப் போல் அனைவரையும் மதிப்பாய் — மனத்தில்
தாழ்வான எண்ணத்தைத் தவிர்ப்பாய்!
அன்பான பேச்சினையே உதிர்ப்பாய் — வீண்
ஆரவாரம் நீக்கிவிட்டால் சிறப்பாய்!

பெரியோர்கள் வழிதன்னில் செல்வாய் — வாழ்வில்
பேரின்பக் கொள்கைவழி வெல்வாய்!
சிறியோரின் சேர்க்கைதனை வெறுப்பாய் — நன்கு
சிந்தித்துச் செயல்தனையே முடிப்பாய்! ❑

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 645/2002
T.N. P.M.G. (NR) 645/2002 தமிழ்ச்சிட்டு

# கும்மி கோலாட்டம்.

—பாவலர் இளஞ்சித்திரன்—

கும்மி யாட்டம், கோலாட்டம்!
குமரியர், சிறுமியர் ஆடாட்டம்!
தும்பி கள்போல் சூழாட்டம்!
தோகை மயில்கள் போலாட்டம்!

வட்டம் அடித்தே ஆடாட்டம்;
வளைய வளைய ஆடாட்டம்!
கொட்டிக் கைகள் போடாட்டம்;
கூடவே வாயும் பாடாட்டம்!

கொஞ்சும் குருவிகள் கூடாட்டம்;
குழுமி இவர்கள் ஆடாட்டம்!
நெஞ்சம் துள்ள ஆடாட்டம்;
நேர்சீர் அடிகள் போட்டாட்டம்!

கால்கள் தாளம் போட்டிடுமாம்;
கைகள் இசையைக் கூட்டிடுமாம்!
கோல்கொட் டாட்டம்; கோலாட்டம்!
கும்மியும் கோயில் தேராட்டம்!

குலுங்கக் குலுங்கி ஆடாட்டம்;
குனிந்தும், நிமிர்ந்தும் ஆடாட்டம்!
சலங்கை ஒலியோ(டு) ஆடாட்டம்;
தாழ்குழ லோடிடை ஆடாட்டம்!

தமிழ்நாட் டாட்டம்; கூட்டாட்டம்!
சாகா இலக்கியப் பாட்டாட்டம்!
தமிழ்நாட் டேற்றம் காட்டாட்டம்!
தமிழ்ப்பண் பாட்டை ஊட்டாட்டம்!

*

தமிழ்ச்சிட்டு, மேடவாக்கம், சென்னை - 601 302.